People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org
Web: www.pwtn.org

**9.4.2011**

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்**
**தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்**
**அண்ணாசாலை**
**சென்னை 60002**

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு**

**மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.**

**மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 15 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.**

**எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 01.4.2011 முதல் 8.4.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.**

## 01-4-2011 முதல் 8-4-2011 முடிய இவ்வாரத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | – |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | – |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 32 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 3 |
| 5. | வகுப்பறை வன்முறை | 2 |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 1 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 1 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | – |
| 9. | கொத்தடிமை | – |
| 10. | பெண் சிசு கொலை | 2 |
| 11. | குழந்தை திருமணம் | 1 |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 10 |

| | | |
|---|---|---|
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | 1 |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | – |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | – |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | 1 |
| 17. | மணல் கொள்ளை | – |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | – |
| 19. | பழங்குடியினர் மீதான வன்முறை | 1 |
| 20. | முதியவர்கள் மீதான வன்முறை | – |
| 21. | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | – |
| 22. | பொதுவானவை | 2 |
| | மொத்தம் | 56 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்:

தமிழகத் துணை முதல்வர்

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் – தொகுப்பு-14
# 01.4.2011 முதல் 8.4.2011 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 937. | 01.4.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை சுயராஜியபுரத்தைச் சேர்ந்த பாலமுருகன் மனைவி லட்சுமி. திருமணமாகி 2 மாதங்களே ஆன நிலையில் கூடுதலாக வரதட்சணைக் கேட்டு கணவர் துன்புறுத்தியதோடு தாக்கியதாக லட்சுமி புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தினத்தந்தி |
| 938. | 01.4.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகே வடகாட்டுப்பட்டியைச் சேர்ந்த தும்பையா மனைவி தங்கத்தாய்(53). வீட்டில் தனியாக இருந்த தங்கத்தாயைத் தாக்கி நகை மற்றும் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 939. | 01.4.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை ஆலங்குளத்தைச் சேர்ந்த சுரேஷ்குமார் மனைவி நித்யா(26). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டுத் துன்புறுத்துவதாக நித்யா புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தினகரன் |
| 940. | 01.4.2011 | **மதுரை மாவட்டம்:** தமிழக அரசு, சிறப்பாகப் படிக்கும் ஆதிதிராவிடர் மாணவர்கள், விரும்பிய பள்ளிகளில் சேர உதவித் தொகை வழங்குகிறது. மதுரை செயின்ட மேரீஸ் மேல்நிலைப் பள்ளியில் 16 மாணவர்கள் பல்வேறு வகுப்புகளில் படித்து வருகின்றனர். இந்த மாணவர்களுக்கு வழங்க வேண்டிய ரூ. 5 லட்சத்திற்கான உதவித் தொகை வழங்கப்படவில்லை என மாணவர்கள் புகார். | வகுப்பறை வன்முறை | தினமலர் |
| 941. | 01.4.2011 | **சென்னை மாவட்டம்:** விருகம்பாக்கம், பள்ளிக்கடை மெயின் தெருவைச் சேர்ந்த மூர்த்தி மனைவி ஜெயந்தி(35). விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்துவிட்டு திரும்பும் வழியில் | பெண்கள் மீதான வன்முறை & கொலை முயற்சி | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஜெயந்தியை மர்ம நபர்கள் கொலை செய்ய முயன்றதாக புகார். | | |
| 942. | 02.4.2011 | **கோவை மாவட்டம்:** போத்தனூர் MGR நகர், சாரதா மில்ரோட்டில் உள்ள தனியார் பள்ளியின்10ம் வகுப்பு பயிலும் மாணவன் சந்தோஷ்குமார். தேர்வில் தோல்வியடைந்து விடுவோம் என்ற பயத்தில் சந்தோஷ்குமார் விஷம் குடித்துத் தற்கொலை. | குழந்தைகள் மீதான வன்முறை & தற்கொலை | டெக்கான் கிரானிக்கல் |
| 943. | 02.4.2011 | **கோவை மாவட்டம்:** நரசிம்ம நாயக்கன்பாளையம் நாகலம்மன்நகர் சதீஷ்குமார் மனைவி தனலட்சுமி(25). கணவர் தனலெட்சுமியின் பெற்றோர்களிடம் தொடர்ந்து பணம் கேட்டு மிரட்டியதால் மனமுடைந்த தனலெட்சுமி தூக்கிட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | டெக்கான் கிரானிக்கல் |
| 944. | 02.4.2011 | **கோவை மாவட்டம்:** தொண்டாமுத்தூர், பேரூர், பட்டீஸ்வரர்கோவில் வாசலில், பிறந்த 3 நாட்களே ஆன ஆண்குழந்தையை கொலை செய்து தூக்கி வீசியுள்ளனர். | சிசுக்கொலை | டெக்கான் கிரானிக்கல் |
| 945. | 02.4.2011 | **கோவை மாவட்டம்:** கோணவைக்கம்பாளையம், வடிவேல் குழந்தைகள் தர்சனி, நவீன், வடிவேல் மனைவி பிரபாவதி தன் குழந்தைகளை அடித்துச் சித்திரவதை. காய்ச்சிய இரும்பு கம்பியால் 16 இடங்களில் சூடு வைத்துச் சித்திரவதை. | குழந்தைகள் மீதான வன்முறை | Express |
| 946. | 02.4.2011 | **மதுரை மாவட்டம்:** காரில் பணம் கொண்டு வந்ததாக வதந்தி கிளம்பியதைத் தொடர்ந்து சோழவந்தான் அருகே, தி.மு.க அ.தி.மு.கவினர் இடையே மோதல். காவலர்கள் தடியடி. | காவல் நிலையச் சித்திரவதை | தினத்தந்தி |
| 947. | 02.4.2011 | **தேனி மாவட்டம்:** கம்பம் தொகுதி தி.மு.க வேட்பாளர் ராமகிருஷ்ணன் உத்தமபாளையம் அருகில் உள்ள மல்லிங்காபுரத்தில் பிரசாரம் மேற்கொண்டார். அரசு கொடுத்த மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் அழகம்மாள் என்ற பெண் கர்ப்பபையை அறுவை சிகிச்சை. | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பொதுமக்கள் முன் தன்னை அடையாளப்படுத்தியதற்காக மனமுடைந்த அழகம்மை தற்கொலைக்கு முயற்சி.. பாதிக்கப்பட்ட அழகம்மை தேர்தல்கமிஷனில் புகார். | | |
| 948. | 03.4.2011 | **சேலம் மாவட்டம்:** அம்மாபேட்டை ராஜகணபதி தெரு தருமன் மகன் ஜெகதீஷ். அருகில் உள்ள பாலசுப்ரமணியன் ஜவுளிக்கடையில் வேலை பார்த்து வந்த ஜெகதீசை கடை உரிமையாளர் அடித்துச் சித்திரவதை. ஜெகதீஸ் இரண்டு கைகளும் உடைந்து படுகாயம். | குழந்தைகள் மீதான வன்முறை | டெக்கான் கிரானிக்கல் |
| 949. | 03.4.2011 | **மதுரை மாவட்டம்:** திருநகர் பகுதியில் காவலர்கள் வாகன சோதனையில் ஈடுபட்டபோது அவ்வழியாக வந்த சரக்கு வேனில் இருந்த 35மூடை ரேசன்அரிசி பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | தினகரன் |
| 950. | 03.4.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே ஆட்டுக்குளத்தைச் சேர்ந்த நடராஜன் மகள் ரமா(17) பிளஸ் 2 மாணவி. தேர்வு எழுதச் சென்ற ரமாவை காணவில்லை என புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 951. | 03.4.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே வெள்ளாளப்பட்டியைச் சேர்ந்த முகமதுயூசப் மகள் நபீசாபேகம்(22). வரன் பார்த்துச் சென்ற மாப்பிள்ளை வீட்டார் தகவல் கொடுக்காததால் மனமுடைந்த நபீசாபேகம் தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 952. | 03.4.2011 | **வேலூர் மாவட்டம்:** ராணிப்பேட்டை ஓட்டேரி பழைய திருத்தணி சாலையில் தோல் தொழிற்சாலைகளின் கழிவுநீரைக் கொண்டு செல்வதற்காக கால்வாயின் மேல்புறத்தில் சிமெண்ட் பூச்சு வேலையில் ஈடுபட்ட 3 வாலிபர்கள் விஷவாயு தாக்கி மரணம். | விஷ வாயு தாக்கி மரணம் | தினத்தந்தி |
| 953. | 03.4.2011 | **மதுரை மாவட்டம்:** திருவாதவூரில் அரசு மேல் நிலைப் பள்ளிக்கு அருகே டாஸ்மாக் மதுக்கடை இருப்பதால் மாணவிகளுக்கு இடையூராக | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உள்ளது. நடவடிக்கை எடுக்க வேண்டும் என ராஜசேகரன் புகார். | | |
| 954. | 03.4.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** காமராஜ் நகரில் வசிக்கும் மல்லிகா(24). அதே பகுதியில் உள்ள மயிலம் அடுத்த கீழ்அடையாளம் காலனியைச் சேர்ந்த சுரேஷ்(25). இருவரும் காதலித்தனர். மல்லிகாவை திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தைக் கூறி சுரேஷ் பாலியல். கர்ப்பம் அடைந்த மல்லிகாவை சுரேஷ் திருமணம் செய்ய மறுப்பு. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 955. | 04.4.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை கூடல்புதூர் அருகே அரியூரைச் சேர்ந்த காளிதாஸ் மனைவி ஆசை பொண்ணு(29). அதே பகுதியைச் சேர்ந்த சுரேஷ்(25) ஆசைப் பொண்ணு குளிப்பதை பார்த்ததாக புகார். சுரேஷ் கைது, | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 956. | 04.4.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை சேடப்பட்டி அருகே குறுக்கம்பட்டியைச் சேர்ந்த சிவராஜ் மனைவி ரம்யா(21). திருமணமாகி ஆறு மாதங்களே ஆன நிலையில் கணவரின் குடிப்பழக்கத்தால் மனமுடைந்த ரம்யா விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 957. | 04.4.2011 | **திருவாரூர் மாவட்டம்:** திருவாரூர் அடுத்த வான்மீகபுரம் காளியம்மன் கோவில் பின்புறம் பிறந்து 2 நாட்களே ஆன பச்சிளம் பெண் குழந்தை கிடந்தது. மீட்கப்பட்ட குழந்தை மருத்துவமனையில் சிகிச்சை. | பெண்சிசுக் கொலை | தினமலர் |
| 958. | 05.4.2011 | **நாமக்கல் மாவட்டம்:** கபிலர் மலையில் அரசினர் மேல்நிலைப் பள்ளி 8ம் வகுப்பு படிக்கும் மாணவி மேகலா. இப்பள்ளியில் 8ம் வகுப்பு ஆசிரியர் சம்பத் வகுப்பில் உள்ள அனைத்து மாணவ மாணவிகளை பிரம்பால் அடித்து மிரட்டி தோப்புக்கரணம் போட வைத்ததாக 8ம் வகுப்பு மாணவி மேகலா ஆசிரியர் சம்பத் மீது புகார். | வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 959. | 05.4.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டியைச் சேர்ந்த பள்ளி | பெண்கள் மீதான | தினமணி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தலைமை ஆசிரியர் செங்குட்டுவன்(42) மனைவி சித்ரா(39). கணவர் மது அருந்தி வந்ததால் கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த சித்ரா தூக்கிட்டுத் தற்கொலை. கிராம நிர்வாக அலுவலருக்குத் தெரியாமல் கணவர் மற்றும் உறவினர்கள் சடலத்தை எரித்துவிட்டதாக புகார். செங்குட்டுவன் கைது. | வன்முறை & தற்கொலை | |
| 960. | 05.4.2011 | **நாகை மாவட்டம்:** மயிலாடுதுறை அய்யாறப்பர் கீழவீதியைச் சேர்ந்த சக்திவேல் மனைவி மாதவி(29). கணவர் கூடுதல் வரதட்சணைக் கேட்டு 7 மாத கர்ப்பிணியான மாதவியை வீட்டுக்குள் பூட்டி வைத்து துன்புறுத்தியதாக சக்திவேல் மீது மாதவி புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | திருமுகம் (29.3.11) |
| 961. | 05.4.2011 | **நாகை மாவட்டம்:** வேதாரண்யம் அடுத்த தெற்கு மருதூரைச் சேர்ந்த கந்தசாமி(28) மனைவி மகேஸ்வரி(26). திருமணமாகி 7 மாதங்களே ஆன நிலையில் கூடுதல் வரதட்சணைக் கேட்டு கணவர் துன்புறுத்தியதால் மனமுடைந்த மகேஸ்வரி விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | திருமுகம் (24.3.11) |
| 962. | 05.4.2011 | **நாகை மாவட்டம்:** மயிலாடுதுறையை அடுத்த சோழம்பேட்டை, வியாபாரிகள் செட்டி தெருவில் வசித்துவந்தவர் ஞானசேகரன் மனைவி அமுதா(38). கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த அமுதா தூக்கிட்டத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | திருமுகம் (29.3.11) |
| 963. | 06.4.2011 | **சிவகங்கை மாவட்டம்:** சாக்கூரைச் சேர்ந்த அருளானந்தம். இவர் தனது மகன் மூன்ஜாமீன் பெறுவதற்கான சான்றிதழை கேட்டு சாக்கூர் வி.ஆர்.ஓ சந்தானகிருஷ்ணனை(45) அணுகினார். அவர் ரூபாய் 700 லஞ்சம் கேட்டதாக அருளானந்தம் புகார். | லஞ்சம் | O. ஆனந்தகுமார் (25.3.11) |
| 964. | 06.4.2011 | **சிவகங்கை மாவட்டம்:** தேவகோட்டை சிற்சபேசன் | குழந்தைகள் மீதான | O. ஆனந்தகுமா |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தெருவைச் சேர்ந்த முத்துராமன் மகள் ரமா(15). ரமாவை முத்துராமனின் தம்பி பாண்டி கடத்திச் சென்றதாக புகார். | வன்முறை | ர் (23.3.11) |
| 965. | 06.4.2011 | **சிவகங்கை மாவட்டம்:** காட்டுநாயக்கர் (பழங்குடியினர்) சமூகத்தைச் சேர்ந்தவர்கள் 50 ஆண்டுகளுக்கு மேலாக சாதி சான்றிதழ் கிடைக்காமல் அவதிக்குள்ளாசி வருவதாகவும் அதிகாரிகளின் அலட்சியத்தால் மாணவர்களின் கல்வி, வேலை வாய்ப்பு பாதிக்கப்பட்டதாக பொது மக்கள் புகார். | பழங்குடியினர் மீதான வன்முறை & அதிகாரிகளின் அலட்சியம் | O. ஆனந்தகுமார் (3.4.11) |
| 966. | 06.4.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** பரமக்குடியில் உள்ள தனியார் பள்ளியில் 8ம் வகுப்பு படிக்கும் மாணவி கவிதா(13). கமுதி அருகே மேலராமநதி பகுதியைச் சேர்ந்த சாமிதாஸ் மகன் இமானுவேல்சேகரன்(31) வீட்டில் தனியாக இருந்த கவிதாவை கட்டாயமாகத் திருமண செய்ய முயற்சி செய்ததாக இமானுவேல் மீது புகார். | குழந்தைகள் மீதான வன்முறை & குழந்தைத் திருமணம் | O. ஆனந்தகுமார் (28.3.11) |
| 967. | 06.4.2011 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடி அழகப்பன் அம்பலம் தெருவில் உள்ள கழனிவாசல் பகுதியைச் சேர்ந்த சம்பத்குமார்(34) மனைவி சோனியா(28). கணவர் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதாக சோனியா புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | O. ஆனந்தகுமார் (01.04.11) |
| 968. | 06.4.2011 | **விருதுநகர் மாவட்டம்:** கோவில்பட்டியைச் சேர்ந்த கல்குவாரி உரிமையாளர் முருகன். வியபார விஷயமாக வெளியூர் செல்லும்போது வழியில் காவலர்கள் வாகன சோதனையில் போது காரை பறிமுதல் செய்ததோடு அலைக்கழித்ததாக காவலர்கள் மீது முருகன் புகார். | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 969. | 06.4.2011 | **நாகை மாவட்டம்:** நாகை மீனவர்கள் கோடியக்கரைக்கு தென்கிழக்கில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் நாகை மீனவர்களின் படகுகளை சுற்றி | மீனவர்கள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வளைத்து, மீனவர்களைக் கடுமையாக தாக்கியதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் புகார். | | |
| 970. | 07.4.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** ஒசூர் ராயகோட்டை ஹவுசிங்போர்டு 39 வது கிராஸ் பகுதியைச் சேர்ந்த ராஜூ கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு மரணம். ராஜூவின் நண்பர் துரை என்ற போஸ் (31). ராஜூவின் மனைவி மற்றும் மகள்களை மிரட்டி பாலியல் பலாத்காரம். துரை என்ற போஸ் கைது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினத்தந்தி |
| 971. | 07.4.2011 | **விருதுநகர் மாவட்டம்:** அருப்புக்கோட்டை தொகுதி அ.தி.மு.க வேட்பாளர் வைகைச் செல்வனை ஆதரித்து நடிகர் செந்தில் தேர்தல் பிரசாரம் செய்தார். கூட்டத்தில் செந்தில் மீது வீசிய கற்கள் வீசப்பட்டது. இதில் குழந்தைகள் தீபா(7), தமிழரசி (11) காயமடைந்தனர். | குழந்தைகள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 972. | 08.4.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை பெருங்குடி அருகே சின்ன உலகானியைச் சேர்ந்த பாலுச்சாமி மனைவி இருளாயி(55)யை அதே பகுதியைச் சேர்ந்த சுரேந்திரன், பஞ்சவர்ணம் இருவரும் சேர்ந்து தாக்கியதாக இருளாயி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 973. | 08.4.2011 | **சிவகங்கை மாவட்டம்:** தேவகோட்டை அருகே திருவேகம்பத்தூர் போலீஸ் சரகம் கீழ உச்சாணி கிராமத்தைச் சேர்ந்த கண்ணன் மகள் செல்வபிரியா(11). சிறுமியை அதே பகுதியைச் சேர்ந்த ராஜேந்திரன், வேலுச்சாமி(30) மற்றும் ஒருவர் மூவரும் சேர்ந்து சிறுமியை பாலியல் செய்து கொலை செய்ததாக புகார். | தலித்துகள்மீதான வன்முறை & குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை & கொலை | தமிழ்சுடர் |
| 974. | 08.4.2011 | **வேலூர் மாவட்டம்:** குடியாத்தம் ஜீவா நகரைச் சேர்ந்த நதியா(25). கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த நதியா தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (01.04.11) |
| 975. | 08.4.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** சேத்துப்பட்டு அடுத்த | குழந்தைகள் மீதான பாலியல் | பாஸ்கர் (01.04.11) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொளக்காரவாடி கிராமத்தைச் சேர்ந்த 10ம் வகுப்பு படிக்கும் மாணவியை அதே பகுதியைச் சேர்ந்த ரகு(32), குப்புசாமி(25) இருவரும் பாலியல். மாணவி புகார். ரகு, குப்புசாமி கைது. | வன்முறை | |
| 976. | 08.4.2011 | **வேலூர் மாவட்டம்:** ராணிப்பேட்டை அடுத்த சிப்காட் அருகே உள்ள மணியம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த சேகர்(37) மனைவி கல்பனா. சேகர் சித்தூரைச் சேர்ந்த குமாரி(33) என்பவரை மறுமணம் செய்ததோடு கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துரத்தியதாக கல்பனா புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | பாஸ்கர் (02.04.11) |
| 977. | 08.4.2011 | **வேலூர் மாவட்டம்:** செய்யாறு அடுத்த அரசாணிப்பாளையத்தைச் சேர்ந்த செல்வம் மனைவி கோவிந்தம்மாள்(42). உடல் நலக்குறைவால் அவதிப்பட்ட கோவிந்தம்மாள் விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (02.04.11) |
| 978. | 08.4.2011 | **வேலூர் மாவட்டம்:** மதுராந்தகம் அருகேயுள்ள பழைய மாம்பாக்கத்தைச் சேர்ந்த அமிர்தம்(60). அதே பகுதியைச் சேர்ந்த விஜயகுமார்(45) இருவருக்கும் நடந்த தகராறில் ஆத்திரமடைந்த விஜயகுமார் அமிர்தத்தை, கத்தியால் குத்தி கொலை. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | பாஸ்கர் (02.04.11) |
| 979. | 08.4.2011 | **வேலூர் மாவட்டம்:** கும்மிடிப்பூண்டி அடுத்த கவரப்பேட்டை அருகேயுள்ள பூவலம்பேடு கிராமத்தைச் சேர்ந்த ராஜா(29) மனைவி நதியா(24). கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த ராஜா மனைவியின் வாயில் விஷயத்தை ஊற்றிக் கொலை செய்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | பாஸ்கர் (02.04.11) |
| 980. | 08.4.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** சமுத்திரம் பகுதியைச் சேர்ந்த அம்பேத்கர்(33) மனைவி அகிலாண்டேஸ்வரி(29). இருவரும் காதலித்தனர். இருவருக்கும் எற்பட்ட தகராறில் மனமுடைந்த அகிலாண்டேஸ்வரி திக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (02.04.11) |

| | | | | |
|---|---|---|---|---|
| 981. | 08.4.2011 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் மாவட்டத்தில் உள்ள தனியார் பள்ளிகளில் அடுத்த கல்வி ஆண்டுக்கான மாணவர் சேர்க்கைளை தொடங்கி அதிக அளவில் பள்ளிக் கட்டணம் கேட்பதாக பெற்றோர் புகார். | கூடுதல் கல்விக் கட்டணம் | பாஸ்கர் (03.04.11) |
| 982. | 08.4.2011 | **சென்னை மாவட்டம்:** செங்குன்றம் அடுத்த சோலையம்மன் நகர் 40 வது சாலையைச் சேர்ந்த ஆறுமுகம் மகள் லதா(17)க்கும் அவரது அத்தை மகன் எழிலரசனுக்கும் (22) திருமணம் நிச்சயிக்கப்பட்ட்து. ஆனால் லதாவுக்கு எழிலரசனை பிடிக்காததால் திருமணம் செய்ய மறுப்பு. ஆத்திரமடைந்த எழிலரசன் லதாவை கத்தியால் குத்திக் கொலை. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | பாஸ்கர் (08.04.11) |
| 983. | 08.4.2011 | **சென்னை மாவட்டம்:** கொருக்குப்பேட்டை காரணேசன் நகரைச் சேர்ந்த முருகன் மகள் ஓமனா(20) அதே பகுதியைச் சேர்ந்த திலீப் கிண்டல் செய்ததாக ஓமான புகார். இருதரப்பையும் விசாரித்த காவலர் சடகோபன் மாணவி ஓமனாவை திட்டியதால் மனமுடைந்த ஓமனா தற்கொலைக்கு முயற்சித்ததாக ஓமனாவில் பெற்றோர் கமிஷனரிடம் புகார். | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை முயற்சி | பாஸ்கர் (08.04.11) |
| 984. | 08.4.2011 | **வேலூர் மாவட்டம்:** மீஞ்சூர், பெருமாள்கோயில் தெருவைச் சேர்ந்த பச்சையப்பன்(32) மனைவி லெட்சுமி(28). கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த லெட்சுமி தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (08.04.11) |
| 985. | 08.4.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** ஊரந்தவாடி கிராமத்தைச் சேர்ந்த 17 வயது மாணவி. தண்ணீர் பிடிக்கச் சென்ற மாணவியை காணவில்லை என பெற்றேர் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | பாஸ்கர் (07.04.11) |
| 986. | 08.4.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** தானிப்பாடி அருகே உள்ள திருவாடத்தனூர் கிராமத்தைச் சேர்ந்த லால்அகமது மனைவி மிஸ்ஷாத்(25). அதே பகுதியைச் சேர்ந்த பாலமுருகன்(30) | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (07.04.11) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மிஸ்ஷாத்திடம் ஆபாசமாக பேசியதாக புகார். | | |
| 987. | 08.4.2011 | **வேலூர் மாவட்டம்:** குடியாத்தம் பெரும்பாடி கிராமத்தைச் சேர்ந்த குமரேசன் மனைவி புஷ்பலதா(22). திருமணம் ஆகி 3 மாதங்களே ஆன நிலையில் கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதால் மனமுடைந்த புஷ்பலதா தூக்கிட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (06.04.11) |
| 988. | 08.4.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** ஆரணி அடுத்த ராட்டினமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த ரவி(37) மனைவி விமலா(27). தனியாக வீட்டில் இருந்த விமலா தூக்கிட்டுத் தற்கொலை. மகளின் சாவில் மர்மம் இருப்பதாக விமாலவின் பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (05.04.11) |
| 989. | 08.4.2011 | **வேலூர் மாவட்டம்:** திருவேற்காடு பேருந்து நிலையம் அருகே நின்ற பால்வாடி தெருவைச் சேர்ந்த கார்த்திக்(26) செல்வம்(24) சுதாகர்(25) முன்று இளைஞர்களை திருவேற்காடு சட்டம் –ஒழுங்கு இன்ஸ்பெக்டர் புருசோத்தமன் தாக்கியதாக புகார். | காவல் நிலையச் சித்திரவதை | பாஸ்கர் (05.04.11) |
| 990. | 08.4.2011 | **சென்னை மாவட்டம்:** வண்ணாரப்பேட்டை காவலர் குடியிருப்பைச் சேர்ந்த ஆயுதப்படை காவலர். உலகநாதன் (35) மனைவி பிரியா(30). இவர்கள் வீட்டில் வேலை செய்த திருவொற்றியூரைச் சேர்ந்த ரோசய்ய மகள் பிரணவி(14) உலகநாதன் வீட்டில் தூக்கிட்டுத் தற்கொலை. தனது மகளின் சாவில் மர்மம் இருப்பதாக ரோசய்யா புகார். | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (03.04.11) |
| 991. | 08.4.2011 | **வேலூர் மாவட்டம்:** ராணிப்பேட்டை அடுத்த சிக்கராஜபுரம் மோட்டூர் கிராமத்தைச் சேர்ந்த குமார் மனைவி செந்தமிழ்ச்செல்வி(22). திருமணமாகி 10 மாதங்களே ஆன நிலையில் செந்தமிழ்செல்வி | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (05.04.11) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | **தூக்கிட்டுத் தற்கொலை.** | | |